பாடம் 6 ஏப்ரல் 30 – மே 6

# ஆபிரகாமின் வேர்கள்



ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 12; ஏசா 48:20; 36:6, 9; எரே 2:18; ஆதி 13; ஆதி 14; எபி 7:1–10.

**மனன வசனம்:** 'விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்'. எபிரெயர் 11:8.

ஆதியாகமப் புத்தகத்தின் நடுப்பகுதிக்கு வந்துவிட்டோம். இப்பகுதியில் ஆபிரகாமின் முதல் அழைப்பையும் இரண்டாம் அழைப்பையும் உள்ளடக்கிய அவனுடைய பயணத்தைப் பார்க்கிறோம். ஆதி 12-22. முதல் அழைப்பில், அவனை 'போ' **(லெக் லெக்கா)** என்றார். ஆதி 12:1. அதனால் ஆபிரகாம் தனது கடந்த காலத்தைவிட்டுப் புறப்பட்டான். இரண்டாம் அழைப்பின்போதும் 'போ' **(லெக் லெக்கா)** என்றார். அதனால் ஆபிரகாம் தன் மகனில் இருந்த தன் எதிர்காலத்தைவிட்டுப் புறப்பட்டான். ஆதி 22:2. ஆபிரகாம் எப்போதும் அங்குமிங்கும் அலைய வேண்டியதாயிற்று. அதனால் 'பரதேசி' என்று அழைக்கப்பட்டான். ஆதி 17:8.

எதையும் அறியாமல் ஆபிரகாம் பயணித்திருக்க வேண்டும். தன்னிடமிருந்த அனைத்தையும் விட்டான்; தான் காணாத ஒன்றை நோக்கிச் சென்றான். இந்த இரு அழைப்புகளுக்கு இடையில் ஆபிரகாம் விசுவாசத்தோடு பயணித்தான்; அப்போது தேவன், 'நீ பயப்படாதே' என்று சொன்னார்; அது நம்பிக்கையளித்தது. ஆபி 15:1. ஆபிரகாமுடைய பயணத்தின் மூன்று பகுதியிலும் இந்த வார்த்தை அடிப்படையாக இருக்கிறது; அதுபற்றி 6, 7, 8ஆம் வாரங்களில் படிப்போம்.

ஆபிரகாம் விசுவாசத்திற்கு உதாரணமாக இருக்கிறான். ஆதி 15:6. பழைய ஏற்பாடு அவனை விசுவாசமுள்ளவன் என்று அழைக்கிறது. நெகே 9:7,8. புதிய ஏற்பாட்டில், பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடிச் சுட்டிக்காட்டப்படும் ஒரு நபர் ஆபிரகாம்; அது ஏனென்று படிப்போம்.

*2021, மே 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஆபிரகாமின் புறப்பாடு

**தன் தேசத்தையும் குடும்பத்தையும்விட்டு ஆபிரகாமை தேவன் புறப்படச் சொன்னது ஏன்? ஆதி 12:1-9. உடனே ஆபிரகாம் செய்தது என்ன?**

வேதாகமப்பதிவின்படி கடைசியாக நோவாவிடம்தான் தேவன் பேசியிருந்தார். மாம்சமான சகல ஜீவஜந்துக்களோடும் தாம் ஓர் உடன்படிக்கை பண்ணுவதாகவும், இனியோர் உலகளாவிய வெள்ளம் வருவதில்லை என்றும் ஜலப்பிரளயத்திற்கு பிறகு அவனிடம் சொன்னார். ஆதி 9:15-17. அந்த வாக்குறுதியின் தொடர்ச்சியாகவே ஆபிரகாமிடம் பின்னர் பேசினார். அதாவது, பூமியின் சகல தேசங்களும் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

அவன் தனது கடந்த காலத்தை விடுவதைச் சார்ந்தே அந்த வாக்குறுதியின் நிறைவேறுதல் இருந்தது. அதாவது ஆபிரகாம், தன் குடும்பம், தன் தேசம், தன் பிறப்புரிமை என தனக்கு பரிச்சயமான அனைத்தையும் விட்டான். அவ்வளவு தூரம் தேவன் அவனை வலியுறுத்தியிருக்க வேண்டும்; ஏனென்றால், அங்கிருந்து 'போ' **(லெக் லெக்கா)** என்கிறரீதியில் ஏழுமுறை மீண்டும்மீண்டும் சொல்கிறார். ஆபிரகாம் முதலாவது 'ஊர் என்கிற கல்தேயருடைய' பட்டணத்தை விட்டான். அதுவும் பாபிலோனியாதான். ஆதி 11:31; ஏசா 13:19. 'பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்' என்று வரலாறு முழுவதிலும் வேதாகம தீர்க்கதரிசிகள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ஏசா 48:20; வெளி 18:4.

ஆபிராகம் தன் குடும்பத்தை விட்டும் சென்றான். ஆபிரகாம் தன் பரம்பரை சொத்துக்களையும், மரபுவழியாகக் கற்று, பெற்றிருந்த அனைத்தையும், கல்வியையும், செல்வாக்கையும் விட்டுச் சென்றான். ஆனாலும், '**(லெக் லெக்கா)**' என்கிற தேவகட்டளையில் போவதைவிட அதிகம் சம்பந்தப் பட்டிருந்தது. **(லெக் லெக்கா)** என்கிற எபிரெயச் சொற்றொடருக்கு 'நீதானே போ' என்று அர்த்தம். தன் சுற்றுச்சூழலையும் குடும்பத்தையும் மறந்து, பாபிலோனைவிட்டு ஆபிரகாம் புறப்படவேண்டியதிருந்தது. தன்னையும்கூட அவன் விடவேண்டியதிருந்ததை இந்த எபிரெயச் சொற்றொடர் வலியுறுத்துகிறது. அதாவது, தன் பாபிலோனிய கடந்தகாலத்தை விட்டு அவன் போகவேண்டியிருந்தது.

அனைத்தையும் விட்டு, தேவன் காட்டுகிற 'ஒரு தேசத்திற்கு' செல்லவேண்டியிருந்தது. மோரியா மலைமேல் ஈசாக்கைப் பலியிடச் சொன்னபோதும் இதே வார்த்தைகள்தாம் வருகின்றன. ஆதி 22:2. ஈசாக்கைப் பலியிடச் சொன்ன அதே இடத்தில்தான் பின்னர் எருசலேம் தேவாலயம் கட்டப்படவிருந்தது. 2நாளா 3:1. அதனால் அந்த வாக்குறுதி பூமியிலிருந்த ஓர் இடத்தையல்ல, உலகமனைத்திற்குமான இரட்சிப்பைப்பற்றியது. அந்தப்பின்னணியில்தான்சகலதேசங்களும்ஆசீர்வதிக்கப்படும் என்று சொன்னார். ஆதி 12:2,3. 'ஆசீர்வதி' என்பதற்கான எபிரெய வினைச்சொல் **பராக்**. அந்தப் பகுதியில் அது ஐந்துமுறை வருகிறது. ஆபிரகாமின் '**சந்ததி**' மூலமாக உலகத்தின் சகல ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட இருந்தார்கள். ஆதி 22:18; 26:4; 28:14. அந்த வாக்குறுதி இறுதியாக இயேசுகிறிஸ்துவில் நிறைவேறவிருந்தது. அப் 3:25. அந்தச் '**சந்ததி**'யான இயேசுவை இந்தப் பகுதி குறிக்கிறது.

---

**நீங்கள் எதைவிட்டுப் புறப்படும்படி தேவன் சொல்லுகிறார்? அதாவது, தேவனுடைய அழைப்புக்குச் செவிகொடுக்கும்படி, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எதை விடவேண்டியுள்ளது?**

# எகிப்து தந்த சோதனை

**ஆபிரகாம் வாக்குத்தத்த தேசத்தைவிட்டு எகிப்திற்குச் சென்றது ஏன்? ஆதி 12:10–20. ஆபிரகாமைவிட பார்வோன் எவ்வாறு வித்தியாசமாக நடந்துகொண்டான்?**

ஆபிரகாம் வாக்குத்தத்த தேசத்திற்குச் சென்று சேர்ந்த புதிதில், 'அத்தேசத்திலே பஞ்சம் உண்டானதால்' எகிப்திற்குச் செல்லத் தீர்மானித்தான். ஆதி 12:10. பஞ்சக்காலங்களில் கானான் தேசத்து மக்கள் எகிப்திற்குச் சென்றதாக பண்டையகால எகிப்து ஆவணங்கள் சொல்கின்றன. கி.மு. 2060-1700 இல் இருந்த மத்திய ராஜ்யத்தின் காலத்தில் தொகுக்கப்பட்ட மெரிகேர் எனும் எகிப்திய நூலில், கானானிலிருந்து செல்பவர்கள் 'பரிதாபத்திற்குரிய ஆசியர்கள்' என்றும், 'தண்ணீர் கிடைக்காமல் பரிதாபமாக, உணவுக்காக இடம் இடமாக அலைபவர்கள்' என்று குறிப்பிடப்படுகின்றனர்.[1]

முற்காலத்தில் இஸ்ரவேலர் எகிப்திற்குச் செல்லத் தூண்டப்படுவது அடிக்கடி நிகழ்ந்துள்ளது. எண் 14:3; எரே 2:18. எனவே, மனிதர்கள் தேவனை நம்பாமல், மனிதர்களை நம்புவதற்கு ஓர் அடையாளமாக எகிப்து இருக்கிறது. 2இராஜா 18:21; ஏசா 36:6,9. எகிப்தில் எப்போதும் தண்ணீர் இருக்கும்; விசுவாசத்தோடு வாழ வேண்டியதில்லை; எல்லா வளத்தையும் கண்ணாரக் காணமுடியும். பஞ்சம் உண்டான தேசத்தோடு ஒப்பிடும்போது, எகிப்து மிகச்சிறந்த தேர்வாகத்தான் இருந்திருக்கும். ஆனால் தேவன் ஆபிரகாமிடம் அப்படிச் சொல்லியிருக்கவில்லை.

ஊர் எனும் பட்டணத்தைவிட்டு வந்த அதே ஆபிரகாம் இப்போது கானானை விட்டு எகிப்துக்குச் சென்றான். தேவன் சொன்னபடி ஊர் எனும் இடத்தைவிட்டு கிளம்பியது, ஆபிரகாமின் விசுவாசத்தைக் காட்டியது. ஆனால் இப்போது தன் சொந்த விருப்பத்தின்படி வாக்குத்தத்த தேசத்தைவிட்டுக் கிளம்புகிறான். முன்பு தேவனைச் சார்ந்திருந்தான்; இப்போது தன்னலம்பற்றி மட்டுமே யோசிக்கிற ஓர் அரசியல்வாதிபோல ஒழுக்கத்தை மறந்து, வெகுசாமர்த்தியமாகச் செயல்படுகிறான். 'ஆபிரகாம் எகிப்தில் தங்கியிருந்தபோது, மனித பெலவீனத்திற்கும் ஒழுங்கீனத்திற்கும் அவன்கூட தப்பவில்லை என்பது தெரிகிறது. சாராள் தன் மனைவி என்கிற உண்மையை மறைத்ததால், தேவனுடைய பாதுகாப்பை தான் நம்பாததைக் காண்பித்தான்; தன் வாழ்க்கையில் அடிக்கடி வெளிப்படுத்திய அந்த மேலான விசுவாசம் குறைவுபட்டதே அதற்குக் காரணம்'.[2]

மிகப்பெரிய தேவமனிதர்கள்கூட தவறிழைக்கலாம்; தேவன் அவர்களைக் கைவிடாமல் இருக்கலாம். எனவே, கிருபையால் இரட்சிப்பு கிடைப்பதற்கு புதிய ஏற்பாடு ஆபிரகாமை உதாரணமாகக் காட்டுகிறது என்றால், அது கிருபையை வலியுறுத்துவதற்கே. கிருபை மட்டும் இல்லாவிட்டால், நாம் எல்லாரையும்போல ஆபிரகாமுக்கும் எந்த நம்பிக்கையும் இருந்திருக்காது.

[1] Miriam Lichtheim, Ancient Egyptian Literature, Volume I: The Old and Middle Kingdoms (Berkeley, CA: University of California Press, 1973), pp. 103, 104.

[2] Ellen G. White, Patriarchs and Prophets, p. 130

**உண்மையுள்ள கிறிஸ்தவர்கள்கூட சரியான பாதையிலிருந்து விலகுவது எளிது; அதை இந்தச் சம்பவம் எவ்வாறு காட்டுகிறது? கீழ்ப்படியத் தவறுவது எப்போதுமே ஏன் ஒரு நல்ல தீர்மானமல்ல?**

# ஆபிரகாமும் லோத்தும்

**குணத்தின் முக்கியத்துவம்பற்றி இந்தச் சம்பவம் சுட்டிக்காட்டுவது என்ன? ஆதி 13:1–18.**

ஆபிரகாம் மீண்டும் கானானுக்கு வருகிறான்; எகிப்திற்குச் சென்றது தேவையற்ற அலைச்சல் ஆனது. வாக்குத்தத்த தேசத்திற்கு ஆபிரகாம் முதலில் வந்தபோது தேவனோடிருந்த அனுபவத்தில் சிறு இடைவெளி ஏற்பட்டது; அது இப்போது மீண்டும் தொடருகிறது. முதன்முதலாக கானானுக்குள் வந்தபோது செய்ததுபோல, பெத்தேலில் தங்கினான். ஆதி 12:3-6; 13:3. ஆபிரகாம் மனந்திரும்பி, மீண்டும் **'தன்னிலைக்கு'** வந்திருந்தான். அதாவது, விசுவாசமுள்ளவன் ஆனான்.

ஆபிரகாம் தேவனோடு சேர்ந்துவிட்டதை, பிறமனிதர்களோடு அவன் வைத்திருந்த உறவு காட்டியது. அதாவது எந்தப் பகுதி யாருக்கு என்று பிரச்சனை வந்தபோது, தன் சகோதரனின் மகனான லோத்தை அவன் கையாண்டவிதம் காட்டியது. ஆபிரகாம்தான் முதலில் ஒரு சமாதான ஒப்பந்தம் செய்கிறான்; லோத்துவை முதலில் தேர்ந்தெடுக்கச் சொல்கிறான். ஆதி 13:9,10. ஆபிரகாமிடம் தயாளமும் இரக்கமும் காணப்பட்டதை அது காட்டியது.

லோத்து தனக்கென பக்கத்திலிருந்த, செழிப்பான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தான். ஆதி 13:10,11. ஆனால் அந்தப் பகுதியிலிருந்த மக்கள் துன்மார்க்கராக இருந்ததை அவன் யோசிக்கவில்லை. ஆதி 13:13. இதில் லோத்துவின் பேராசைக் குணம் வெளிப்படுகிறது. லோத்து **'தனக்கென'** தெரிந்துகொண்டதாக மூலமொழியில் உள்ளது. அது ஜலப்பிரளயத்திற்குமுன் வாழ்ந்தவர்கள் **'தங்களுக்கென'** தெரிந்துகொண்டதை ஞாபகப்படுத்துகிறது. ஆதி 6:2.

ஆனால் ஆபிரகாம் விசுவாசத்துடன் செயல்பட்டான். ஆபிரகாம் தேசத்தைத் தெரிந்துகொள்ளவில்லை; தேவன் கிருபையாகக் கொடுத்தார். லோத்தைப்போல அல்லாமல், தேவன் சொன்னபோதுதான் ஆபிரகாம் தேசத்தை சுற்றிலும் பார்த்தான். ஆபி 13:14. ஆபிரகாம் லோத்தைவிட்டுப் பிரிந்த பிறகுதான், அவனிடம் மீண்டும் பேசினார். ஆதி 13:14. தேவன் ஊர் எனும் இடத்திலிருந்து ஆபிரகாமை அழைத்தபிறகு, இங்குதான் மீண்டும் அவனிடம் பேசினதாக வேதாகமம் சொல்கிறது. 'உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப்பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்'. ஆதி 13:14,15. பிறகு அவனுக்குரிய எல்லைகளைத் தீர்மானிப்பதற்கு அடையாளமாக 'நட' என்று சொன்னார். 'நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி; உனக்கு அதைத் தருவேன்' என்றார். ஆதி 13:17.

தேவனே அதை அவனுக்குக் கொடுத்ததை கர்த்தர் தெளிவுப்படுத்துகிறார். அது ஓர் ஈவு; கிருபையின் ஈவு. அதை ஆபிரகாம் விசுவாசத்தால் சுதந்தரிக்கவேண்டும்; அந்த விசுவாசம் கீழ்ப்படிதலுக்கு ஏதுவாக இருக்கும். தேவன் கிரியைசெய்தால்மட்டுமே, தேவன் ஆபிரகாமுக்கு வாக்குரைத்திருந்த அனைத்தும் நிறைவேறும். ஆதி 13:14-17.

**மற்றவர்கள் நம்மிடம் தாராளமாகவும் இரக்கமாகவும் நடக்காவிட்டாலும், நாம் எவ்வாறு அவர்களிடம் அவ்வாறு நடக்கலாம்?**

# பாபேல் கூட்டணி

**வாக்குத்தத்த தேசத்தை ஈவாகக் கொடுத்தபிறகு நடக்கும் இந்தப் போரின் முக்கியத்துவம் என்ன? ஆதி 14:1–17. ஆபிரகாம்பற்றி இந்தச் சம்பவம் சுட்டிக்காட்டுவது என்ன?**

இதுதான் வேதாகமம் பதிவுசெய்துள்ள முதல் போர். ஆதி 14:2. மெசொப்பொத்தாமியாவையும் பெர்சியாவையும் சேர்ந்த நான்கு நாடுகள் கூட்டணி அமைத்து, சோதோமின் ராஜாவும், கொமோராவின் ராஜாவும் அடங்கிய கானானின் ஐந்து கூட்டணி நாடுகளுடன் சண்டையிட்டார்கள். ஆதி 14:8. எனவே அது ஒரு பெரிய போர்தான். ஆதி 14:9. கானானியர்கள் தங்களுக்கு அதிகாரிகளாக இருந்த பாபிலோனியர்களுக்கு எதிராகக் கலகம்செய்ததால் யுத்தம் உண்டாயிற்று. ஆதி 14:4,5. இது வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு யுத்தமாக இருந்தாலும், ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்த தேசத்தை ஈவாகக் கொடுத்த பிறகு நடந்த **'உலகளாவிய'** யுத்தம் என்று இதை ஆவிக்குரிய ரீதியில் கவனிக்க வைக்கிறது.

கானான் தேசத்தைச் சேர்ந்த பலர் இந்த யுத்தத்தில் பங்கெடுத்தார்கள். அந்தத் தேசத்தின் ஆளுகையைத் தீர்மானிக்கிற யுத்தமாக இருந்தது. ஆனால் ஆபிரகாம்தான் அந்த யுத்தத்தில் அக்கறை காட்டியிருக்கவேண்டும்; ஏனென்றால் அவன்தான் உண்மையில் அந்தப் பகுதிக்குச் சொந்தக்காரன். ஆனால் அவன் மட்டும்தான் முதலில் அந்த யுத்தத்தில் பங்கெடுக்கவில்லை.

ஆபிரகாம் நடுநிலை வகித்ததற்கான காரணம், வாக்குத்தத்த தேசத்தை படைபெலத்தாலோ அரசியல் வியூக ஞானத்தாலோ சொந்தமாக்க முடியாது என்பதை அறிந்திருந்ததே. அந்த ராஜ்யத்தை தேவன் ஆபிரகாமுக்கு ஈவாகக் கொடுத்தார். தன் சகோதரனின் மகனாகிய லோத்துவைச் சிறைப்பிடித்துச் சென்றதால்தான், அந்த யுத்தத்தில் அவன் பங்கெடுக்கிறான். ஆதி 14:12,13.

'மம்ரேயில் கருவாலி மரத்தோப்பில் ஆபிரகாம் சமாதானமாக வாழ்ந்து வந்த நிலையில், தப்பியோடி வந்த ஒருவன் அந்த யுத்தம் பற்றியும், அவன் சகோதரன் மகனைச் சிறைப்பிடித்தது பற்றியும் சொன்னான். லோத்துவின் நன்றிகெட்ட தன்மையை ஆபிரகாம் தன் மனதில் வைத்திருக்கவில்லை. லோத்து மேலிருந்த பாசம் தலைதூக்கியது; அவனைக் காப்பாற்ற உறுதிபூண்டான். முதற்கண் தேவனிடம் ஆலோசனைகேட்டு, ஆபிரகாம் யுத்தத்திற்கு ஆயத்தம்செய்தான்'[1].

ஆனால் முழுக்கூட்டணியையும் எதிர்த்து ஆபிரகாம் போரிடவில்லை. லோத்துவை சிறைப்பிடித்து வைத்திருந்த முகாமில் மட்டும், இரவில், யாரும் எதிர்பாராத வேளையில் அதிரடி தாக்குதல் நடத்தினான். லோத்துவைக் காப்பாற்றினான். இவ்வாறு தேவனுக்கு உண்மையாயிருந்த அந்த மனிதன் தைரியசாலியாகவும் உளத்திண்மையோடும் இருந்தான். அந்தப் பகுதியில் அவன் செல்வாக்கு அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை; அவன் நற்குணமுள்ள மனிதனென மக்கள் அறிந்து, அவன் சேவிக்கிற தேவனைப்பற்றி அதிகம் கற்றுக்கொண்டார்கள்.

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 135.

**நம் செயல்கள் மற்றவர்களில் எத்தகைய செல்வாக்கை உண்டாக்குகிறது? நம் செயல்களால் நம் விசுவாசம்பற்றி எத்தகைய செய்திகளை வெளிக்காட்டுகிறோம்?**

# மெல்கிசேதேக்குக்கு தசமபாகம்

**மெல்கிசேதேக்கு யார்? ஆதி 14:18–24; எபி 7:1–10. எங்கோ இருந்து வந்த அந்த ஆசாரியனுக்கு ஆபிரகாம் ஏன் தன் தசமபாகத்தைச் செலுத்தினான்?**

மெல்கிசேதேக்கு திடீரென வந்ததால், குழம்பவேண்டிய அவசியமில்லை. ஆபிரகாமுக்கு கானானின் ராஜாக்கள் நன்றி தெரிவித்தார்கள்; இப்போது ஆபிரகாம் இந்த ஆசாரியனுக்கு நன்றி தெரிவிக்கிறான்; அதை தசமபாகம் செலுத்தி வெளிப்படுத்துகிறான்.

மெல்கிசேதேக்கு சாலேம் எனும் பட்டணத்திலிருந்து வந்தான்; அதற்கு **'சமாதானம்'** என்று அர்த்தம்; யுத்த சந்தடிக்குப்பிறகு சமாதானம் பிறந்திருந்தது.

மெல்கிசேதேக்கு என்றால் **'நீதியின் ராஜா'**; நீதி என்பதற்கான எபிரெய வார்த்தை **ட்ஸெடெக்**. சோதோமின் ராஜா பெயர் பேரா; அதற்கு **'தீமையில்'** என்று அர்த்தம். கொமோராவின் ராஜா பெயர் பிர்சா; அதற்கு **'துன்மார்க்கத்தில்'** என்று அர்த்தம்; அவர்கள் தன்மையைச் சுட்டிக்காட்டிய பட்டப்பெயர்களாக இவை இருந்திருக்கலாம். ஆதி 14:2.

கானானிய ராஜாக்களுக்கு அடையாளமாக இருந்த வன்முறையும் தீமையும் அடங்கியபிறகே மெல்கிசேதேக்கு வருகிறான். வேதாகமத்தின் இந்தப் பகுதியில்தான் முதன்முதலாக 'ஆசாரியன்' எனும் வார்த்தை வருகிறது. ஆதி 14:18. மெல்கிசேதேக்கு 'உன்னதமான தேவனுடைய' ஆசாரியன். ஆதி 14:18. ஆபிரகாமும் தன் தேவனை 'உன்னதமான தேவனாகிய கர்த்தர்' என்று அழைக்கிறான். ஆதி 14:23. எனவே மெல்கிசேதேக்கை ஆபிரகாம் தேவனுடைய ஆசாரியனாகப் பார்த்தான். ஆனால் மெல்கிசேதேக்கை கிறிஸ்து என்று சொல்வதில் அர்த்தமில்லை. அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களில், அவன் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தான்.

மெல்கிசேதேக்கு ஆசாரியப் பணி செய்தான். மெல்கிசேதேக்கு 'அப்பமும் திராட்சரசமும்' கொண்டுவந்தான்; புதிதாக திராட்சைபழத்திலிருந்து எடுக்கப்பட்ட சாற்றை அவ்வாறு குறிப்பிடுவார்கள். உபா 7:13; 2நாளா 31:5. அத்தகைய திராட்சரசத்தையே தசமபாகமாகவும் செலுத்தினார்கள். உபா 14:23. மேலும், ஆபிரகாமை மெல்கிசேதேக்கு ஆசீர்வதித்தான். ஆதி 14:19.

ஆனால் ஆபிரகாம், 'வானத்தையும் பூமியையும் உடையவராகிய' தேவனைக் கனப்படுத்தும் வகையில், அவனுக்கு 'எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்'. ஆதி 14:19; 14:20. 'வானத்தையும் பூமியையும் உடையவர்' என்பது சிருஷ்டிப்பு சம்பவத்தை ஞாபகப்படுத்துகிறது. ஆதி 1:1. 'வானத்தையும் பூமியையும்' என்றால் 'சகலத்தையும்' என்று அர்த்தம். எனவே எல்லாவற்றையும் உடைய தேவனுக்கு நன்றிசெலுத்தும் வகையில், தசமபாகம் செலுத்தினான். எபி 7:2–6; ஒப்பிடவும் ஆதி 28:22. தசமபாகம் செலுத்தினவர்கள், அதை தேவனுக்குக் கொடுக்கிற பரிசாக நினைக்காமல், அவர் தங்களுக்குக் கொடுத்த பரிசின் ஒரு பகுதியாக நினைத்தார்கள்; ஏனென்றால், எல்லாவற்றையும் தேவனே கொடுக்கிறார்.

---

**தசமபாகம் செலுத்துவது எவ்வாறு விசுவாசத்திற்கும், விசுவாசத்தை வளர்க்கிற செயலுக்கும் பலத்த அடையாளமாக இருக்கிறது?**

# மேலும் படிக்க:

'கிறிஸ்துவின் திருச்சபை ஓர் ஆசீர்வாதமாக விளங்க வேண்டும்; அதன் உறுப்பினர்கள் பிறருக்கு ஆசீர்வாதமாக இருந்து, ஆசீர்வாதம் பெறவேண்டும். சகல தேசங்களுக்கும் முன்பாக தேவன் ஒருகூட்ட ஜனத்தைத் தெரிந்துகொண்டதின் நோக்கம் அவர்களை தம் குமாரரும் குமாரத்திகளுமாக தத்தெடுப்பது மட்டும் அல்ல; மாறாக, தம்மை அறிவதின் நன்மைகளை அவர்கள் மூலம் வழங்குவதற்காகவே. கர்த்தர் தம்முடைய விசேஷித்த நண்பனாக இருப்பதற்கு மட்டுமல்ல, தேசங்களுக்கு தாம் அருள விரும்பின விசேஷித்த, தனித்துவமான சிலாக்கியங்களை அவர்களுக்குக் கடத்தும் ஊடகமாக இருப்பதற்காகவும் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டார். சுற்றிலும் ஒழுக்கக்கேடு எனும் அந்தகாரம் காணப்பட்டாலும், அவன் வெளிச்சமாக விளங்க வேண்டியிருந்தது.

"தேவன் தம் பிள்ளைகளுக்கு வெளிச்சத்தையும் சத்தியத்தையும் வழங்கி ஆசீர்வதிப்பது, நித்திய ஜீவன் எனும் ஈவை அவர்கள் பெறுவதற்காக மட்டும் அல்ல; அவர்களைச் சுற்றிலும் உள்ளவர்களும் ஆவிக்குரிய வெளிச்சத்தைப் பெறுவதற்காகவுமே அப்படிச் செய்கிறார். 'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'. தேவன் தம் பிள்ளைகளை உப்பாக மாற்றும்போது, அவர்கள் பாதுகாக்கப்படுவதுமட்டும் அல்ல; மற்றவர்களைப் பாதுகாக்கிற கருவிகளாகவும் அவர்கள் மாறுகிறார்கள்.

"தேவனுடைய மாளிகையில் ஜீவனுள்ள கற்களாகப் பிரகாசிக்கிறீர்களா? நம்முடைய ஒவ்வோர் அலுவலையும் கட்டுப்படுத்துகிற செல்வாக்கை நம் பக்தி வாழ்க்கை வெளிப்படுத்தாவிட்டால், அது மெய்யான பக்தி அல்ல. நம் வாழ்க்கையின் அலுவல்களில் நம் பக்தி பின்னிப்பிணைந்து வெளிப்படவேண்டும். மறுரூபமாக்குகிற கிறிஸ்துவின் கிருபையை இருதயங்களில் பெற்றிருக்கவேண்டும். சுயம் குறையவும், கிறிஸ்து பெருகவும் அவர்கள் அதிகமாக முயற்சிக்க வேண்டும்".[1]

[1] Ellen G. White, Reflecting Christ, p. 205.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'உன்னை ஆசீர்வதிப்பேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்' என்று ஆபிரகாமை தேவன் ஆசீர்வதித்தார். ஆதி 12:2. அப்படியானால் ஆசீர்வாதம் என்பதின் பொருள் என்ன? ஆபிரகாம் தொழுத அதே தேவனைத் தொழுதுகொள்கிற நாமும் எவ்வாறு மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கலாம்?*

2. *ஆபிரகாம் தன் மனைவியை சகோதரி என்று சொன்ன பாதி உண்மை ஏன் தவறானது? எது மிகப்பெரிய மோசம் - பொய்சொல்வதா? அல்லது, பொய் பொதிந்திருக்கும் ஒரு பகுதி உண்மையைமட்டும் சொல்வதா?*

3. *ஆதி 14:21–23ஐ மீண்டும் வாசியுங்கள். சோதோமின் ராஜா சலுகை வழங்கியபோது, ஆபிரகாம் சொன்னது என்ன? ஏன் அவ்வாறு சொன்னான்? அந்தச் சம்பவத்திலுள்ள முக்கியப்பாடம் என்ன? ராஜாவின் சலுகையை ஆபிரகாம் ஏற்றிருந்தால், அவனை ஏன் குற்றப்படுத்த முடியாது?*

# கனவுத் திருமணம்

**ஜூலியா பான்டரெங்கோ**

அமெரிக்காவில் ரூத் ஏழாம் வகுப்பு படித்தபோது, இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, ஊழியப்பணிசெய்ய தன் வாழ்க்கையை அர்ப்பணித்தாள்.

எட்டாம் வகுப்பு படித்தபோது, செவந்த்–டே அட்வென்டிஸ்ட் ஆலயத்தைச் சுத்தம் செய்கிற வேலையை அவளுக்குக் கொடுத்தார்கள். சுத்தம்செய்வதுபற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. ஆனால், அந்த நேரத்தில் ஆலயத்தில் இருந்த பியானோவை வாசித்தாள். தன் இரட்சகரைப்பற்றிய பாடலை பியானோவில் வாசித்தபோது, பல தேசங்களிலும் இருந்து வந்த மக்கள் ஆலயத்தில் கூடியிருப்பதுபோலக் கற்பனைசெய்துகொள்வாள். தன்னோடு சேர்ந்து இசை இசைத்து, பாடல் பாடுகிற ஒருவரைத் திருமணம்பண்ணவேண்டும் என்கிற ஆசை மனதில் உருவானது. அவர் கிடைப்பாரா?

ரூத்துக்கு 15 வயதானபோது, புதிதாக திருமணமான தன் சகோதரி தன் திருமண உடையைப் போட்டுக்கொண்டு, மனமுடைந்து அழுததைப் பார்த்தாள். எனவே அப்படியொரு நிலைமை தனக்கு வரக்கூடாதெனத் தீர்மானித்தாள். தன்னுடைய கணவருக்கு என்னென்ன நல்ல குணங்கள் இருக்கவேண்டுமெனப் பட்டியல் போட்டாள். அந்தப் பட்டியலைப் பார்த்த அம்மா, “ரூத், நீ உன் கணவர் விரும்புகிற பெண்ணாக மாறவேண்டும்” என்று ஞானமான ஆலோசனை சொன்னார். எனவே, தன் வருங்கால கணவனிடம் தான் எதிர்பார்த்த குணங்களை தான் வளர்த்துக்கொள்ள ஆரம்பித்தாள். அந்த வருங்கால கணவன் யார்?

ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் சேருவதற்குமுன் அவருக்கு நிச்சயமானது. ஆனால் ரூத் அதை நிராகரித்துவிட்டார். சில மாதங்கள் கழித்து, இன்னொருவருடன் பழகினார். ஆனால் வேறு ஒரு பெண்ணோடு தொடர்புவைத்திருந்ததால், உறவு முறிந்தது.

கோடைக்காலத்தில், பாடற்குழுவில் கலந்துகொள்ள ரூத் ஆயத்தமானாள். அப்போது அவளுடைய தோழி, “அதோ எமில் மோல்ட்ரிக் வந்துவிட்டார். அவருடைய காரில் ஏறிக்கொள்வோம்” என்று சொன்னாள். “அது யார்?” என்று ரூத் கேட்டார். “உனக்குத் தெரியாதா? அவர் பாடல்பாடுவார், ஆர்கன் இசைப்பார், ஒரு போதகராகப் போகிறார்” என்று தோழி சொன்னால். அடுத்த சில மணி நேரங்களிலேயே ரூத்தும் எமிலும் ஒருவருக்கொருவர் தங்கள் மனதைப் பறிகொடுத்தார்கள்.

எமிலுக்கும் மோல்ட்ரிக்கிற்கும் திருமணமாகி இன்று கிட்டத்தட்ட 60 வருடங்கள் ஆகின்றன. 15க்கும் அதிகமான நாடுகளில் ஊழியம் செய்திருக்கிறார்கள். எமிலுக்கு 12 இசைக்கருவிகள் வாசிக்கத் தெரியும். இந்தத் தம்பதியர் தனியாக உக்ரைன் நாட்டிற்கு 10 முறைக்கும்மேல் சென்றிருக்கிறார்கள். அங்குத் திருமணங்கள் நடத்திவைத்துள்ளார்கள்; ஆங்கிலவகுப்புகள் நடத்தியிருக்கிறார்கள்; வேதாகமக்கூட்டங்களும் நடத்தியிருக்கிறார்கள்.



சிறுவயதில் பியானோவுக்குமுன் அமர்ந்து, பாடல் பாடி, ஜெபித்த அந்த நாட்களையும், தன் கனவை தேவன் நிறைவேற்றியிருப்பதையும் எமில் நினைவுகூருகிறார். “இன்று உலகம் முழுவதிற்கும் சென்று பாடுகிறேன், இசை இசைக்கிறேன். தேவன் என்னுடைய ஜெபங்களுக்குப் பதிலளித்து வருகிறார்” என்று சொல்கிறார் எமில்.